
www.padippakam.com



# காற்றுவழிக்கிராமம்

~நாடகம்~

மூலக்கவிதைகள்
கவிஞர் சு.வில்வரெத்தினம்

அரங்கவடிவம்
தமயந்தி

<u>பாத்திரங்கள்</u>

கிராமதேவதை
காற்று
புயலன்
கிழவன்
ஆல்மரம்
பனைமரம்
கிராமவாசி-1
கிராமவாசி-2
கிராமவாசி-3
சிறுமி
சிறுவன்
உரைஞர்-1
உரைஞர்-2

வெளியீடு: இலக்கியா பதிப்பகம்
Markvegen-3a, 6004 Ålesund, NORWAY
Tf: (47) 70 13 23 67

படிப்பகம்

# கிராமத்துக்குள் போகுமுன்...

கவிஞர் க.வில்வரெத்தினத்தின் காற்றுவழிக்கிராமம் கவிதைத்தொகுப்பு தபாலில் கிடைத்த அன்று அதனை ஒரே மூச்சில் படித்து முடித்தேன் என்பதைவிட எனது கிராமத்துக்குள் மீண்டுமொரு தடவை தவழ்ந்து, நடந்து புழுதியளைந்து, ஓடிவிளையாடி, வியர்வைசிந்தியுழைத்து கூழ் குடித்து வாழ்ந்து மீண்டேன் என்பதே உண்மை.

இந்த உண்மைக்கு அடுத்தாற்போல் என்னைக் கவிந்துகொண்ட துயரையும், கோபத்தையம் எடுத்தச் சொல்வதற்கு சத்தியமாக என்னிடம் எந்த மொழியிலும் எந்த வார்த்தைகளும் இல்லைத்தான். கனத்துப்போன அந்தத் துயர்களுக்கும், கோபத்துக்கும் அடுத்தாற்போல் நகர்ந்த மூன்று மணிநேரங்களில் நேர்ந்து முடிந்தது இந்த நாடகப்பிரதியின் உருவாக்கம்.

கவிஞர் மண்ணில் நின்று நேரிடையாக அனுபவித்து நொந்து, துக்கித்து, கோபித்து, அவற்றின் நிழலாய்ப் படைத்த இந்த நிஜவரிகளுக்கு, வாசகனாய் மட்டும், அல்லது எனக்கு முன்பு தெரிந்த மண்ணை மட்டும் கண்முன் கொண்டுவந்து நிறுத்தி இந்த அரங்கைப் படைப்பதில், கவிஞர்நிலை உணர்வுகள் முழுவதையும் கொண்டு வந்துள்ளேனா என்பதில் எனக்கு இன்னமும் சந்தேகம்தான்.

காற்றவழிக்கிராமம் கவிதைத் தொகுப்பிலுள்ள கவிஞரின் அனைத்துக் கவிதைகளையும் எடுத்தாண்டு இந்த அரங்கினை உருவாக்கவில்லையெனினும், அவை தவிர்க்கப்பட வேண்டியவைதான் எனக் கூறுவதற்கில்லை. எல்லாக் கவிதைகளுமே இந்த அரங்கிற்குப் பொருத்தமானதாகவேயிருந்தன. எதை எடுப்பது, எதை விடுப்பது என்ற குழப்பம் என்னுள் ஏற்பட்டது நிஜம்தான். ஆயினும் வாழ்க்கையைப் பேசும் இந்தக் கவிதைகளின் வலிய வார்த்தைகள் சொற்பமெனினும், ஓங்கிய குரலெடுத்து அரங்கை வியாபிக்கத் தக்கவை என்பது உண்மையிலும் உண்மையானது.

ஐந்தாவது தடவையாக காற்றுவழிக்கிராமம் பேர்கன் நகரில் அரங்கேற பல வழிகளில் பக்கபலமாய் நின்றுழைத்த பேர்கன் தேன் தமிழோசை வானொலிக்கும், அதன் அங்கத்தினர்க்கும், அத்தோடு, மிகக் குறுகிய அவகாசத்துக்குள் இந்தப் பிரதியை வடிவமைப்புச் செய்ததோடு, பதிப்பித்தும் தந்துதவிய திரு.ஞானநாயகம் அவர்களுக்கம் இந்தவேளையில் நன்றியைக் கூறிக்கொண்டு, நமது கிராமங்களில் ஒன்றுக்குள் உங்களை அழைத்தச் செல்கின்றேன்.

-தமயந்தி-
பேர்கன், நோர்வே
14.07.2001

(விடிதல் போன்ற ஒளி பரவலுடனும், காலை ஆரவார இசையுடனும், திரை விலகுகிறது. அரங்கின் மத்தியில் கிராம தேவதை அலங்காரமாய் அமர்ந்திருக்கின்றாள். அதன் வலமிடமாய் பனையும், ஆலமரமும் கம்பீரமாய் நிற்கின்றன. உரைஞர் இருவர் இரு கரைகளிலும் தோன்றி உரையாற்றுகின்றனர்)

உரைஞர்-1: எமது நிலம்

உரைஞர்-2: எமது நிலம்

உரைஞர்-1: எங்கள் ஜனனம்,எங்கள் வாழ்வு, எங்கள் உழைப்பு,
எங்கள் மகிழ்ச்சி எல்லாமுமான எமது நிலம்.

உரைஞர்-2: எங்கள் இரத்தம், எங்கள் சதை, எங்கள் எலும்புகள்,
எங்கள் வேர், எங்கள் விழுதுகள் அனைத்துமான எமது நிலம்.

உரைஞர்-1: எங்கள் பசி தீர்த்து, பட்டினி கலைத்து, உய்வித்த எமது நிலம்.

உரைஞர்-2: எம்மோடு சிரித்து, எம்மோடு அழுது, எம்மோடு பேசி உறவாடி, எம் உறங்கு வேளையில் விழித்திருந்து, எம்மைத் தன்மடி தாங்கி காத்து நின்ற எமது நிலம்.

உரைஞர்-1: அந்நியத் தடங்களால் மிதிபட்டு, சீரழிந்து சின்னாபின்னமாகி
உருக்குலைந்து போவதற்குமுன் அவள் சிரித்து நின்ற காட்சி.

உரைஞர்-2: பூங்காற்றும், தேனூற்றும் அவள் மேனியை
வருடித் தவழ்ந்த காட்சி. எங்கும் பசுமை விளைந்து,
மனித முகங்களில் ஆனந்த மலர்வு முகிழ்ந்த காட்சி.

உரைஞர்-1: கூத்துப்பாட்டும் கும்மாள ஒலிகளும்
நிலமெங்கும் நிரவிக் கிடந்த காட்சி.

உரைஞர்-2: தேரிழுப்பும் திருவிழாவும், திண்ணைக் காற்றின் மென் சுகமும் எம்மை இன்பத் திணறலுக்குள் ஆட்படுத்திய காட்சி.

உரைஞர்-1: எதை மறப்போம் நாம்? எதை மறப்போம்??

உரைஞர்-2: எமது நிலம்!

உரைஞர்-1: எமது நிலம்!!

உரைஞர்-2: போர்த்தீயில் வேகும் எமது நிலத்தின்
ஒரு கிராமத்தைத் தரிசிக்கும் நேரமிது.

(உரைஞர் அரங்கைவிட்டு மறைந்தபின் இரு புறங்களிலுமிருந்து

கிராமத்துச் சிறுவர்கள் தாள லயத்துடன் தோன்றுகின்றனர்.)

பின்னணி:
தன்னனானே தானனானே தானே- தானே
தன்னனானே தானனானே நானே
- - - - - - - - - -

சிறுமி:- இதுதான் எங்கட கிராமம். அழகான கிராமம்.
இதுதான் எங்கட ஆலடி. நான் இந்த ஆலமரத்தடியில இருந்துதான் படிக்கிறனான்.
(மரத்தின் அருகில் உட்கார்ந்தபடி)
சாதிகள் இல்லையடி பாப்பா- குலத் தாட்சி உயர்ச்சி சொல்லல் பாவம்.

(சிறுவன் அரங்கிற்கு வருகின்றான்)

பின்னணி:-
தன்னனானே தானனானே தானே- தானே
தன்னனானே தானனானே நானே
- - - - - - - - - - - - - - -

சிறுவன்: இதுதான் எங்கட கிராமம். அழகான கிராமம்.
இதுதான் எங்கட ஒற்றைப் பனை. இந்தப் பனையடியிலதான் நான் நெடுக விளையாடுறனான். நான் விளையாடப் போறன்.
எவ்விடம் எவ்விடம்? பனையடி பனையடி??
எவ்விடம் எவ்விடம்? பனையடி பனையடி??

(சிறுவன் பனையினருகில் உட்கார்ந்து விளையாடுவதுபோல்
பாவனை செய்கின்றான்)

<u>பாடல்:</u>
ஏரதனில் மாடுகளைப் பூட்டி- வயலில்
ஈரமுள்ள போதவற்றை ஓட்டி
பாருழுது பண்படுத்துவோமே- உலகின்
ஆருயிர்க்கு வாழ்வு தர நாமே

பாத்தி செய்து நீரிறைத்து நேற்று- பிடுங்கி
சோத்துமுடி கட்டி வைத்தோம் நாற்று
சேற்றிலந்த நாற்று நடுவோமே- செந்நெல்
தேசமெங்கும் வாழ்வுதர நாமே

ஆற்றிவிட்ட கூந்தலினைப்போலே- காற்றில்
ஆடியசைந் தோங்குபயிரூடே
தோற்றுபுல்லைச் சென்று களைவோமே- உயிர்க்கு
சோறளித்து வாழ்வுதர நாமே

(பாடல் வரிகள் அமரர். கவிஞர்.செ.கதிரேசபிள்ளை)

(பெண்)கிராமவாசி-1: எங்கட கிராம தேவதையின்ர வடிவப் பாத்தீங்களாப்பா.
எவ்வளவு நிறைஞ்சு போயிருக்கிறாள் சீதேவி.

கிராமவாசி-2: இந்த ஆலடியும், அந்த ஒற்றப் பனையும்
எங்கட கிராமத்துக்கு எவ்வளவு வடிவக் குடுக்குது பாத்தியே?
கிராமத்துக்குக் காவல்காறர் மாதிரி.
இந்தமுறை விளைச்சலுமெல்லோ அள்ளிக் கொட்டியிருக்கிறாள் நாச்சியார்.
பஞ்சமெண்ட பேச்சுக்கே இடமில்லக் கண்டியோ?
எத்தின ஊருக்கு வேணுமெண்டாலும் சோறு போடுவாள் எங்கட கிராமத்தாள்.

கிராமவாசி-1: இந்தமுற அம்பாளுக்குத்
திருவிழாவத் தடபுடலாச் செய்ய வேணுமப்பா.

கிராமவாசி-2: பின்ன. அம்பாளின்ர மனம் நிறயிறமாதிரி
பெரிசாத்தான் செய்யவேணும்.

(கிராமவாசிகள் கிராமதேவதையைச் சுற்றி
திருவிழா எடுப்பது போன்ற பாவனையில் காவடி, கோலாட்டம் போன்ற நடன அசைவுகளையும்
இணைத்து ஆடிப்பாடி மகிழ்கின்றனர்.)

(திருவிழாப் பாடல்.)

பசி கலைக்கப் பயிர் விளையும் பூமியெங்கள் பூமி- அவள்
மனம் குளிரப் பாதங்களில் மலர்களினைத் தூவு

ஆலமர விழுதுகள்போல் சந்ததியும் தழைக்க- மயில்
காவடியைத் தோள் சுமந்து ஆடிவாரும் அண்ணே

தலை நிமிர்ந்த பனைமரம்போல் வாழ்க்கை என்றும் நிமிர
நடமாடிவரும் மழலைகளே! நாளை எங்கள் நாளே!!

(பின்பு எல்லோரும் தேவதையைச் சுற்றி அமர்ந்திருந்து
உணவு பகிர்ந்துண்பதுபோலவும், முதியவர் வெற்றிலை சாப்பிடுவது
போலவும் பாவனைகளில் அமர்ந்திருக்க மெல்ல மெல்ல இருளாகின்றது)

உரைஞர்-1: ஊருறங்கிய ராப்பொழுது.
ஊர் சுமந்த உயிர்கள் கண்ணயர்ந்த சாமவேளை.

உரைஞர்-2: சாமவேளை வந்னன் புயலன்.
சங்கார வெறியோடு, சந்நதமாடி வந்தனன் புயலன்.

(சந்நத இசை, சங்காரப் பாடல்)

தகிட தகிட தகிட தோம், தகிட தகிட தகிட தோம்
www.padippakam.com
காற்றடிக்குது புயலடிக்கிது
கள்ளியின் கொப்பெல்லாம் பெயர்த்தடிக்குது
தகிட தகிட தகிட தோம், தகிட தகிட தகிட தோம்

வானம் கிழியப் பூமி உடையப்
புயலன் வந்தனன் துள்ளியே உயிரைக் கோலி அள்ளவே
தகிட தகிட தகிட தோம், தகிட தகிட தகிட தோம்

இடிமுழக்கம் வெடி முழக்கம் ஏந்தி வந்தேனே
பொடிப்பொடியாய் நிலம் வெடிக்கத் தாவி வந்தேனே
தகிட தகிட தகிட தோம், தகிட தகிட தகிட தோம்

வழியிலென்னை மறிக்கும் பனை தலை உடைத்தேனே
உடல் முறுக்கி நிமிர்ந்து நின்ற அதை உடைத்தேனே
தகிட தகிட தகிட தோம், தகிட தகிட தகிட தோம்

கிளை பரப்பி பருத்த மரம் தனை உடைத்தேனே
விழுதுகளை பொடிப்பொடியாய் சிதறடித்தேனே
தகிட தகிட தகிட தோம், தகிட தகிட தகிட தோம்

(புயலன் அனைத்தையும் சங்காரம் செய்து மறைகின்றான்)

கிராமவாசி-1: எல்லாம் முடிஞ்சு போச்சு! எல்லாம் முடிஞ்சு போச்சு!!

கிராமவாசி-2: சரி எழும்புங்கோ எங்கயாவது போவம்.

கிராமவாசி-1: மிஞ்சிக்கிடக்கிற குஞ்சு குருமான்ர
உயிருகளயாவது காப்பாத்துவம்.

கிராமவாசி-2: விதி விட்ட வழியெண்டு,
கால்போற திசையில போவம். எழும்புங்கோ.

சிறுமி: எங்கட பள்ளிக்கூடமெல்லாம் உடைஞ்சுபோச்சு.

சிறுவன்: நாங்கள் படிக்கவே வழியில்ல.

(ஆலடியில் தரையில் வீழ்ந்துகிடக்கும் வயது முதிருந்த கிழவனை
கிராமவாசிகள் தம்மோடு தூக்கிச் செல்ல முயற்சிக்கின்றனர்.
முடியவில்லை. பாடாய்க் கிடந்தபடியே கிழவனும்
சைகையால் சொல்கிறது தன்னைப்பற்றி யோசிக்காது சென்று விடும்படி.
கிராமவாசிகள் கிழவனைத் தனியாக விட்டுப்போகும்
கொடுநிலையை எண்ணி வருந்தியபடியே துக்கத்தோடு
மேடையைவிட்டு வெளியேறுகின்றனர்)

உரைஞர்-1: காலமெல்லாம் தன் மக்களோடு
ஆனந்தமாய்க் களித்திருந்த எங்கள் கிராமதேவதை.

உரைஞர்-2: காலனாய் வந்த புயலனின் கொடுமையால்
கதறி நிற்கிறாள் இருளில் தன் செல்வங்களை இழந்து.

கிராமதேவதை:- எல்லாம் இழந்தேன். நான் எல்லாம் இழந்தேன்.
எனது விழிகளை, எனது செவிகளை, சுவாச நாளங்களை,
உதடுகளை, எனது நாவினை, எனது முகத்தை எல்லாம் இழந்தேன்.
நான் எல்லாம் இழந்தேன்.

எனது மடியில் கருவாகி ஜனித்து, ஊர்ந்து, தவழ்ந்து நடந்து,
ஓடி விளையாடிய என் செல்வங்களை இழந்தேன்.

குருதியை நெற்றிப் பட்டங்களால் வியர்வையாக்கி,
என் மேனியைக் குளிர்த்திய என் மக்களை இழந்தேன்.

வானம் துழாவித் திரிந்த பறவையைப் பிடித்து,
அதன் இறக்கைகளைப் பிய்த்தெறிந்ததுபோல்,
என் மேனியில் ஊன்றி, ஊர்ந்து திரிந்த விருட்ச வேர்கள்
பிடுங்கி எறியப்பட்டன. எல்லாம் இழந்தேன்! நான் எல்லாம் இழந்தேன்!! எல்லாம்
இழந்தேன்!!!

குஞ்சுப் பறவையின் மேனியில் குண்டுசிகளைப் புதைத்ததுபோல்
எனது மெல்லிய மேனியில் கந்தகப் பொதிகள் புதையண்ணப் பெற்றேன். எல்லாம்
இழந்தேன். நான் எல்லாம் இழந்தேன்.

தாடிக்கிழவன்: கண் முன்னாலேயே
கொள்ளை போகிறது கிராமம்.
விழிகளை இறுக மூடிக்கொண்டிருப்பதாய்
பாவனை செய்தாக வேண்டும்.

பாடல்:

தாயே கிராம தேவதா,
கொலுவிழந்தாய்
கொலுசின் குரலிழந்தாய்
முள்ளில் அழுந்தும் நின் பாத நோவுகள்
எனது மெல்லிதயத்துள் விம்மும்.

ஆலமரம்: வெளியாரின் வருகையோடு
வேர் கொண்ட வாழ்வையும் பிடிக்கிக்கொண்டு
மக்களெல்லாம் வெளியேறிய ஓரிரவிற்குப்பின்
விடியப் பார்த்தால்

வாழ்வெனும் வெள்ளம் வற்றிக் கிடந்த திடலாய்
கிராமம்.

பனை: முற்றத்துச் சூரியன்,
முற்றத்து நிலா,
முற்றத்துக் காற்றென
வீட்டு முற்றங்களுக்கே உரித்தான
வாழ்வனுபவங்கள் விடை பெற்றுக் கொண்டன.

ஆலமரம்: வேலிகளை வெளியார் வெட்டிப் போட்டார்கள்.

பனை: வாசல் கதவுகளை உடைத்துப் போட்டார்கள்.

ஆலமரம்: உள்ளதையெல்லாம் கொள்ளையடித்தார்கள்.

பனை: வீடுகள் திறந்தபடியே கிடந்தன.

தாடிக்கிழவன்: கிராம தேவதையின் அணிகலன்கள் யாவுமே
களவாடப்பட்டு விட்டன.
ஒற்றைச் சிலம்பும் இவள் உடைமையாயில்லை.
பறிபோயின.
பேச்சொலியும், கைவளையோசை வீச்சு நடையும்
பிறைநுதற் திலகமும்
அந்நியன் கைபட்டு அழிந்ததெனவாயிற்று.

பாடல்

கண்பிளக்கும் புண்கள்
புண் உமிழ் கசிவுகள்
கட்டி பட்ட ரணமாய்
உள்ளே அனல் கொதிக்கும்.

தாடிக் கிழவன்: சந்திவிருட்சங்களின் கீழே
இவளின் இதய ஒளிர்வாய் விளக்குகள் எரிவதில்லை.
குந்தியிருந்தழுகிறாள் குமையின் இருள் நடுவே.

பாடல்: கொதித்தென்ன? குமுறியென்ன?
பட்ட காயங்களின் குருதி வாடையும்
தெறிக்காத வார்த்தைகளோடு
குரல்வளையைக் காத்தாக வேண்டும்.
தாயே கிராம தேவதா...

உரைஞர்-1: கிராமத்தின் கொல்லைப் புறமாய்
உறங்கிய காற்று
சோம்பல் முறித்தபடியே

எழும்பி மெல்ல வருகிறது.

உரைஞர்-2: வெறிச்சோடிய புழுதித்தெரு,
குழம்பிக் கிடக்கும் சுவடுகள் மேலாய்
சப்பாத்துக் கால்களின் அழுத்தம்,
காற்றுக்கு குழப்பமாயிருந்தது.

காற்று: முற்றங்கள் பெருக்கும் ஓசைலயம்,
பாத்திரங்களோடு தேய்படும் வளையல் ஒலி,
ஆச்சி, அப்பு, அம்மோயென
அன்பொழுகும் குரல்கள்-
ஒன்றையுமே காணோம்.

என்ன நடந்தது?
ஏனிந்தக் கிராமம் குரலிழந்து போயிற்று.

உரைஞர்-1: திகைத்து நின்றது காற்று
தேரடியில் துயின்ற சிறுவன்
திருவிழாச் சந்தடி கலைந்திருந்தமை கண்டு
மலங்க விழித்தது போல.

உரைஞர்-2: திறந்த வாசலினூடே வீட்டுச் சொந்தக் காரனென
சுதந்திரமாய் நுழைகிற காற்று இப்போ தயங்கியது.

உரைஞர்-1: தயங்கித் தயங்கி மெல்ல
ஓர் வீட்டு வாசலை எட்டிப் பார்த்தது

உரைஞர்-2: ஆளரவமே இல்லை.

உரைஞர்-1: இன்னுமொரு வாசல்

உரைஞர்-2: இல்லை.

உரைஞர்-1: இன்னும் ஒன்று

உரைஞர்-2: இல்லை.

உரைஞர்-1: இன்னும் ஒன்றை எட்டிப் பார்க்கையில்
இழுத்துப் பறிக்கும் மூச்சின் ஓசை.

உரைஞர்-2: சற்றே கிட்டப் போனது.

உரைஞர்-1: வாசற் படியிலே வழுக்கிக் கிடந்தது ஓர் முதுமை.
ஊன்றுகோல் கையெட்டாத் தொலைவிலே.

இழுத்துப் பறிக்கம் மூச்சினிடையே
எதையோ சொல்ல வாயெடுக்கவும்
பறிபோயின சொற்கள்.

உரைஞர்-2: பறியுண்ட மூச்சு
மடியைப் பிடித்து உலுக்குவதாய்
காற்று ஒருகால் நடுங்கிற்று.

உரைஞர்-1: பதற்றத்தோடே
படலையைத் தாண்டிப் பார்த்தது
தூக்க எடுக்க துணை கிடைக்குமாவென்று.

உரைஞர்-2: ஆருமே இல்லை.

உரைஞர்-1: காற்றென்ன செய்யும்?
ஒப்பாரி எழுந்தால் ஏந்தியெடுத்து
ஊரின் காதிலே போடும்.
ஒரு குரலின் உரைசலும் இல்லையே.

உரைஞர்-2: உண்மையிலேயே
காற்றிற்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

காற்று: பக்கத்திலிருந்து உறவுகள்
பால் பருக்க,
கால் பிடிக்க,
கை பிடிக்க,
தேவாரம் ஓத,
கோலாகலமாய்ப் பிரிகின்ற உயிர்
அநாதரவாய்,
அருகெரியும் சுடர் விளக்கின்றி
பறை முழக்கமின்றி, பாடையின்றி...
அட, சாவிலும் கூட ஒரு வாழ்விருந்த கிராமம் இது.

என்ன நேர்ந்தது இந்த அழகுறு கிராமத்துக்கு?
எங்கே போயினர் இந்தக் கிராமத்துச் சனங்கள்?
எங்கே அள்ளுண்டு மறைந்தனர்
செழிப்புறுமிந்தக் கிராமத்தைக் காடுறையவிட்டு? காடுறைய விட்டு!

வைரம் பாய்ந்த இந்தப் பனை மரத்திற்கு என்ன நேர்ந்தது
தலை தொக்கி நிற்க?

சடைத்து, பருத்து, விழுதுகள் ஊன்றிய இந்த ஆல விருட்சத்தை
ஆர் வேரறுத்துச் சீரழித்தார்? ஆர் வேரறுத்துச் சீரழித்தார்?

(காற்று துயரோடு அசையாது நிற்கிறது. தாடிக்கிழவன் மெல்ல மெல்ல அரங்கின்மத்திக்கு காற்றின் அண்மையில் வருகிறார்)

தாடிக்கிழவன்: இடிந்துபோய்க்கிடக்கிற கோயிலின் சிலையாய்
திசைமுகம் நோக்கி இந்தக் கிராமமே
இருகையேந்தி நிற்கிறது.
இந்த லட்சணத்தில்
வாசல்தோறும் வந்திரந்து திரிகிறாய்
வரவேற்பு உபசாரம் அல்ல,
வல்லடி வசைகூட உனக்கில்லை.

பருக்கைகளுக்கு ஆலாய்ப் பறக்கிற காக்கைகளும்
நக்குத்தீனுக்கச் சண்டையிடும் நாய்களும்
சீந்தாத முற்றத்தில்
பூனைவால் மிருதுகாட்டிப் புகுந்து தடவுகிறாய்.

இந்த சந்தி விருட்சத்தைப் பார்த்தாயா
முந்தியெல்லாம் நிழலுக்கு ஒதுங்கவரும் மனிசரிடம்
நேசபாவத்தோடு விசிறிக் கொடுத்தவாறே
குசலம் விசாரிக்கும்,
வித்துயிர்த்த காலத்திலிருந்து வேரூன்றிப் பந்தலாய்
வியாபித்த நாள் வரைய வரலாற்றை விபரிக்கும்.

காற்றே நீயும் போ
நெடுநாள் நினைவுகளைக் கோதிக் கோதி
முடியைப் பிய்த்துக்கொள்ளும் மனிசரைப்போல
சருகுதிர்த்த நினைவுகளைக் கிளறிப்பார்
உருவெழுந்தால் கொடுக்கை வரிந்து கட்டியந்த
ஒற்றைப் பனையின் சிரசைப் பிடித்துலுப்பு
உன்மத்தம் குறைந்ததென்றால் கீழிறங்கி வா
போக்கிழந்து கிடக்கின்ற தெருவின்
புழுதியை ஊதி ஊதி
உறவுகளின் சுவடிருந்தால் தேடுவோம்
நீயும் நானுமாய்.

(தாடிக்கிழவன் அரங்க ஓரத்தில் அசையா நிலையில் நிற்க, கிராமதேவதையின் சோகமும், கோபமும், நம்பிக்கை தருவதுமான நடனத்திற்குரிய பாடல்)

நடனப் பாடல்

உற்ற துயர் சொல்லியழ
உரத்துப் பேச

ஒரு மனுவில்லாத் தனிக் காட்டில்
சிறகொடுக்கி குரலொடுக்கி
சீவியத்தைச்சிறைப்படுத்தி
படாய்ப் படுத்துகின்ற பாழும் மனத்தோடு போராடி
கிழிந்துபோன வாழ்வின்
இக்கரை நகலாய் நாங்கள்

(கிராம தேவதை தன்னிலையில் சென்றமர்கிறாள்.)
கிராம மக்கள் அரங்கிற்கு நம்பிக்கையுடன் வருகின்றனர்)

காத்திருப்போம் (2)
எல்லாத் துயரங்கள் நடுவிலேயும்

உற்ற துயர் சொல்லியழ
உரத்துப் பேச
ஒரு மனுவில்லாத் தனிக் காட்டில்

கிராமவாசி-1: யுத்தமுனைகளால் கிழிக்கப்பட்டு
குருதிப் பிசுக்கேறிப்போன வாழ்வின் பக்கங்களில்
எழுதப்படுமா ஒரு நற்செய்தி?

கிராமவாசி-2: எல்லாமே தெளிவற்றிருககிறது.
ஆயினும்
ஒரு தீக்குச்சி உரசலின்
சிறு நம்பிக்கைத் துளியில் தெரிய வரும் நற்செய்திக்காய்
காத்திருத்தல் மட்டும் தொடரும்.

கிராமவாசி-1: காத்திருப்போம்
எல்லாத் துயரங்களின் நடுவிலேயும்.
தீக்குச்சியிலும் ஈரம் படிந்துவிடாதவாறு காப்போம்.

பாடல்

காத்திருப்போம் (2)
எல்லாத் துயரங்கள் நடுவிலேயும்

(பாடலின் இறுதி வரிகள் ஒலிக்கும்போது கிராமவாசிகள் அரங்க முன்றலுக்கு வந்து வலது கரங்களை உயர்த்தி நம்பிக்கையுடையதாய் நிலையில் நிற்பர். அதேபோல் பனை, ஆலமரம், கிழவன், ஆகிய பாத்திரங்களும் கரங்களை உயர்த்திப் பிடிப்பர்)

-திரை